## சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு நகராட்சி ஆணையர் சார்நிலைப்பணி – வேடசந்தூர் பேரூராட்சி தேர்வுநிலை செயல் அலுவலர், திரு நா. செல்லமுத்து – இரண்டாம் நிலை நகராட்சி ஆணையராக பணிமாறுதல் மூலம் நியமனம் செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை

**அரசாணை (நிலை) எண்.154** **நாள்:24.08.2009.**

**படிக்கப்பட்டது:**

பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் கடிதம் எண்.2528/2007/அ1, நாள் 16.07.2009.

---

**ஆணை:-**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்கள், பேரூராட்சி அலகில் பணிபுரியும் தேர்வுநிலை செயல் அலுவலருக்கான 01.08.2007–ம் தேதிய நிலையிலான முன்னுரிமைப் பட்டியலில் மொத்தம் 235 பணியாளர்கள் இடம் பெற்றுள்ளனர் என்று தெரிவித்து, அவர்களில், வரிசை எண்.1 முதல் 80 வரை கண்டுள்ள பணியாளர்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டு திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் பேரூராட்சியின் செயல்அலுவலராக பணியாற்றும் திரு நா. செல்லமுத்து அவர்களை நகராட்சி ஆணையர், நிலை 2 பணியிடத்தில் பணிமாறுதல் மூலம் நியமனம் செய்ய பரிந்துரை செய்துள்ளார்.

2. பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் செயற்குறிப்பு அரசால் பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனைக்குப்பின், பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் பரிந்துரையினை ஏற்று, திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் பேரூராட்சி தேர்வுநிலை செயல்அலுவலர், திரு நா. செல்லமுத்து அவர்களை தமிழ்நாடு நகராட்சி ஆணையர் சார்நிலைப் பணி சிறப்பு விதிகளில் விதி எண்.2(c)(i)–ன்கீழ் இரண்டாம் நிலை நகராட்சி ஆணையராக பணிமாறுதல் செய்து அரசு ஆணையிடுகிறது.

2

3. திரு நா. செல்லமுத்து, வேடசந்தூர் பேரூராட்சி தேர்வுநிலை செயல் அலுவலர் அவர்களுக்கு பணிநியமன ஆணையினை உடனடியாக வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி
அரசுச் செயலாளர்

பெறுநர்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை – 600 108.
திரு நா. செல்லமுத்து, வேடசந்தூர் பேரூராட்சி, தேர்வுநிலை செயல் அலுவலர், திண்டுக்கல் மாவட்டம் (பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–108 மூலமாக).
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை – 600 002.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.

நகல்:- அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயலர் அவர்களின் தனிச் செயலர், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.2) துறை, சென்னை – 9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

25/08/09
பிரிவு அலுவலர்.
25/8/09